


அ.எண் : 71/2016

தேதி : 13.04.2016

# சமத்துவ மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்களின் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து

தமிழ் ஆண்டுகளில் மன்மத ஆண்டு மறைந்து துர்முகி என்னும் புத்தாண்டு தொடங்குகிறது. ஒவ்வொரு புத்தாண்டு உதயமாகும் போதும், கடந்த ஆண்டின் நன்மைகள் புத்தாண்டில் பல்கிப் பெருக வேண்டும் என்ற நம்பிக்கையும், கடந்த ஆண்டின் சோதனைகள் புத்தாண்டில் நிகழக் கூடாது என்ற பிரார்த்தனையும் அனைவரது எண்ணங்களிலும் இயல்பாக நிறைந்திருக்கும். அந்த வகையில் மலர இருக்கும் தமிழ்ப் புத்தாண்டு, மகிழ்ச்சி அளிப்பதாகவும், வளம் பெருக்குவதாகவும், சமத்துவமும், சகோதரத்துவமும் தழைக்கச் செய்வதாகவும் அமைய வேண்டும் என்று அனைவரும் நம்பிக்கையோடு பிரார்த்திப்போம்.

தமிழகத்தில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தல் மீண்டும் தமிழகத்தில் நல்லாட்சி தொடர வைக்கும் விதமாக அமையட்டும். உலகின் மூத்த மொழியான தமிழ் பேசும் தமிழினம், தேசத்தை வல்லரசாக்கும் முதல் இனம் என்ற பெருமை இப்புத்தாண்டில் கிடைக்கச் செய்வோம். தமிழகம் மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள செந்தமிழ்ச் சொந்தங்களுக்கு என் இனிய தமிழ்ப்புத்தாண்டு நல்வழ்த்துகளை என் சார்பிலும் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் அன்போடு பகிர்ந்து கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்